அறிவிக்கை எண். 05 /2017
நாள் : 26.07.2017

தமிழ்நாடு அரசு

# ஆசிரியர் தேர்வு வாரியம்

4வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, டி.பி.ஐ வளாகம், கல்லூரி சாலை, சென்னை – 600 006

## அறிவிக்கை

பள்ளிக் கல்வி மற்றும் இதர துறைகளில் 2012 முதல் 2016 ஆம் ஆண்டிற்கான சிறப்பாசிரியர்கள் (உடற்கல்வி, இசை, ஓவியம்,தையல்) காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமன பணித்தெரிவிற்கு தகுதியான பணிநாடுநர்களிடமிருந்து 18.08.2017 பிற்பகல் 11.59 மணி வரை **இணையவழியாக மட்டும் (online mode)** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. .

| வ.எண். | பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | பணித்தொகுதி | பதவிக்குறியீடு | காலிப் பணியிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சிறப்பாசிரியர்கள் ( உடற்கல்வி, இசை, ஓவியம்,தையல்) ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ2800 | தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணி | 17ST | 1325 * |

* பின்னடைவுக் காலிப்பணியிடங்கள் 16 உட்பட

### 1. முக்கியமான நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | : | 26.07.2017 |
| ஆ. | இணையவழி விண்ணப்பம் சமர்ப்பித்தல் துவங்கும் நாள் | : | 27.07.2017 |
| இ. | இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் | : | 18.08.2017 |
| ஈ. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | : | 23.09.2017 |

### 2. பாட வாரியாக மற்றும் இனச்சுழற்சி வாரியாக காலிப்பணியிடங்கள் பின்வருமாறு.

**I) பின்னடைவுப்பணியிடம்**

**அ) பள்ளிக் கல்வி இயக்ககம்**

| TURN | DRAWING | MUSIC | SEWING |
|---|---|---|---|
| GTPH | 6 | 0 | 0 |
| SC | 0 | 2 | 2 |
| SCW | 0 | 1 | 2 |
| SCA | 0 | 1 | 0 |
| ST | 0 | 0 | 1 |
| TOTAL | 6 | 4 | 5 |

**ஆ) மதுரை மாநகராட்சி**

| TURN | DRAWING |
|---|---|
| SCA W DW | 1 |
| Total | 1 |

II) நடப்புக் காலிப்பணியிடம்

அ) பள்ளிக் கல்வி இயக்ககம்

| TURN | PET | DRAWING | MUSIC | SEWING |
|---|---|---|---|---|
| GT | 102 | 49 | 12 | 35 |
| GT EX | 8 | 4 | 1 | 3 |
| GT T | 26 | 13 | 3 | 9 |
| GT T EX | 2 | 1 | | 1 |
| GT W | 42 | 20 | 5 | 15 |
| GT W DW | 5 | 2 | 1 | 2 |
| GT W T | 12 | 5 | 1 | 3 |
| GT W T DW | | 1 | | 1 |
| BC G | 87 | 44 | 11 | 29 |
| BC G EX | 7 | 3 | 1 | 3 |
| BC G T | 22 | 10 | 3 | 8 |
| BCG T EX | 2 | 1 | | |
| BC W | 36 | 18 | 4 | 13 |
| BC W DW | 4 | 2 | | 1 |
| BC W T | 9 | 5 | 2 | 3 |
| BC W T DW | 1 | | | 1 |
| BCM G | 12 | 5 | 1 | 3 |
| BCM G EX | 1 | | | 1 |
| BCM G T | 3 | 2 | 1 | 1 |
| BCM W | 4 | 3 | | 2 |
| BCM W T | 1 | 1 | | 1 |
| BCM W T DW | 1 | | | |
| MBC/DNC G | 66 | 33 | 8 | 24 |
| MBC /DNC G EX | 4 | 3 | 1 | 1 |
| MBC/DNC G T | 16 | 8 | 2 | 6 |
| MBC/DNC G T EX | 2 | | | 1 |
| MBC /DNC W | 28 | 12 | 4 | 9 |
| MBC /DNC W DW | 2 | 1 | | |
| MBC /DNC W T | 7 | 4 | 1 | 3 |
| MBC /DNC W T DW | 1 | 1 | | 1 |
| SCG | 50 | 24 | 6 | 18 |
| SCG EX | 4 | 2 | 1 | |
| SCG T | 12 | 6 | 1 | 5 |
| SCG T EX | | 1 | | 1 |
| SC W | 20 | 10 | 3 | 7 |
| SC W DW | 3 | | | 1 |
| SC W T | 5 | 3 | 1 | 2 |
| SC W T DW | | 1 | | |
| SCA G | 11 | 5 | 1 | 3 |
| SCA G EX | 1 | | | |
| SCA G T | 2 | 1 | | 1 |
| SCA G T EX | | | | 1 |
| SCA W | 3 | 3 | | 2 |
| SCA W DW | 1 | | | |
| SCA W T | 1 | | 1 | |
| STG | 4 | 2 | | 1 |
| STG T | | | 1 | |
| ST W | 1 | | | |
| ST W T | 1 | 1 | | |
| ST W T DW | | | | 1 |
| **Total** | **632** | **310** | **77** | **223** |

ஆ) தொடக்கக் கல்வி இயக்ககம்

| TURN | PET |
|---|---|
| GT | 1 |
| GT T | 1 |
| GT W | 2 |
| BC G | 1 |
| BC W DW | 1 |
| BCM W | 1 |
| MBC/DNC G | 1 |
| MBC/DNC G T | 1 |
| SC GT | 1 |
| SCA G | 1 |
| **Total** | **11** |

இ) கோயமுத்தூர் மாநகராட்சி

| TURN | DRAWING | MUSIC | SEWING |
|---|---|---|---|
| GT | 1 | 1 | 1 |
| BC G | 1 | | |
| MBC/DNC G | 1 | 1 | |
| SCA W T DW | 1 | 1 | 1 |
| **Total** | **4** | **3** | **2** |

ஈ) சென்னை மாநகராட்சி

| TURN | PET |
|---|---|
| GT | 1 |
| GT T | 1 |
| BCG | 1 |
| BCG T | 1 |
| MBC/DNC G | 1 |
| SC W DW | 1 |
| **Total** | **6** |

உ) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

| TURN | PET |
|---|---|
| GT | 1 |
| GWDW | 1 |
| BCG | 1 |
| MBC/DNC G | 1 |
| MBC/DNC W DW | 1 |
| SCG | 1 |
| SCAWTDW | 1 |
| **Total** | **7** |

ஊ) சமூகப்பாதுகாப்புத்துறை

| TURN | PET | DRAWING | MUSIC | SEWING |
|---|---|---|---|---|
| GT | 1 | 1 | 1 | 2 |
| GT T | | | | 1 |
| GT W | | | | 1 |
| GW DW | 1 | 1 | | 1 |
| BC G | 1 | 1 | | 2 |
| BC G T | | | | 1 |
| BC W | | | | 1 |
| BC W DW | | | | 1 |
| BCM G | | | | 1 |
| MBC/DNC G | 1 | 1 | | 2 |
| MBC/DNC G T | | | | 1 |
| MBC /DNC W DW | 1 | | | 1 |
| SCG | 1 | 1 | | 2 |
| SC W DW | | | | 1 |
| SCA W T DW | 1 | 1 | 1 | 1 |
| **Total** | **7** | **6** | **2** | **19** |

**குறிப்பு** : மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் உத்தேசமானது, மற்றும் மாற்றத்திற்குட்பட்டது.

**விரிவாக்கம்**

**GT** : பொதுப்பிரிவு
**BC** : பிற்பட்ட வகுப்பினர்
**BCM** : பிற்பட்ட வகுப்பினர்(முஸ்லீம்)
**MBC/DNC** : மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர்.
**SC** : ஆதிதிராவிடர்
**SCA** : ஆதிதிராவிடர் (அருந்ததியினர்)
**ST** : பழங்குடியினர்
**T** : தமிழ்வழி
**W** : மகளிர்
**PH** : உடல் ஊனமுற்றோர்
**G** : பொது
**Ex** : முன்னாள் இராணுவ வீரர்
**DW** : ஆதரவற்ற விதவை
**PET** : உடற்கல்வி ஆசிரியர்

## 3. இடஒதுக்கீடு:

## அ) இன அடிப்படையிலான ஒதுக்கீடு :

நடைமுறையில் உள்ள அரசாணைகள் / விதிகளின் அடிப்படையில் 69 சதவீத இட ஒதுக்கீடு பின்பற்றப்படும். அதாவது 18 சதவீதம் பட்டியல் இனத்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதில் 3 சதவீதம் அருந்ததியர்களுக்கு என முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் இனத்தவர்களுக்குள் ஒதுக்கீடு செய்யப்படும். 1 சதவீதம் பழங்குடி இனத்தவர்களுக்கும், 26.5 சதவீதம் முஸ்லீம்கள் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், 3.5 சதவீதம் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும், 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். எஞ்சியுள்ள 31 சதவீதம் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும்.

பட்டியல் இனத்தவர்களுக்குள், அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் நிரப்பட்ட பின்னரும், தகுதிபெற்ற அருந்ததியினத்தைச் சார்ந்தவர்கள் இருப்பின், அத்தகைய கூடுதலான தகுதிபெற்ற அருந்ததியினர் இனத்தைச் சார்ந்தவர்கள், பிற பட்டியல்

இனத்தைச் சார்ந்தவர்களுடன் தகுதியின் அடிப்படையில் பணித்தெரிவிற்கு கருதப்பட தகுதிபெற்றவர்கள். மேலும் தகுதியான அருந்ததியினர் இனத்தைச் சார்ந்த பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் காலியாக இருப்பின் அப்பணியிடங்கள் அருந்ததியினர் அல்லாத பட்டியல் இனத்தைச் சார்ந்த பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**ஆ) இன அடிப்படையிலான ஒதுக்கீட்டிற்குள் இணை ஒதுக்கீடு:**

**i) மகளிர்களுக்கான ஒதுக்கீடு :** மகளிர்களுக்கென 30 சதவீத ஒதுக்கீடு நடைமுறையில் உள்ள ஆணைகள்/விதிகளின் அடிப்படையில் வழங்கப்படும். பணித்தெரிவிற்கு, போதுமான தகுதிபெற்ற மகளிர் பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் தகுதிபெற்ற அந்தந்த இனத்தினை சார்ந்த ஆண் பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**ii)ஆதரவற்ற விதவை** : பெண்களுக்கான 30% இடஒதுக்கீட்டில் 10% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.

**iii) முன்னாள் படைவீரர் இடஒதுக்கீடு :** முன்னாள் படைவீரர்களுக்கான 5% இடஒதுக்கீடானது தகுதியுள்ள பணிநாடுநர்களுக்கு G.O.MS.No.762 Public (Ex-service men) Department dated.29.08.2002 ன்படி வழங்கப்படும்.

iv) **தமிழ்வழியில் பயின்றவர்களுக்கான ஒதுக்கீடு (PSTM) :** சிறப்பாசிரியர்களுக்கான நேரடிநியமன பணித்தெரிவிற்கு, நடைமுறையில் உள்ள அரசுவிதிகளின்படி பரிந்துரைக்கப்படும் ( Prescribed) கல்வித்தகுதியை தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 20 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும். பொருத்தமான தகுதிபெற்ற பணிநாடுநர்கள் உள்ள நிலையினைப் பொருத்து இவ்விட ஒதுக்கீடு வழங்கப்படும். அத்தகைய தகுதியான பணிநாடுநர்கள் இல்லாத நிலையில், தமிழ்வழியில் பயின்ற மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிஇடங்கள் பொதுவான பணிநாடுநர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**v) மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு:** மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீட்டில் G.O.Ms.No.68 பள்ளிக் கல்வி(பக3(1)), துறை, நாள் 17.04.2017 மற்றும் அரசாணை நிலை எண்.21 மாற்றுத் திறனாளிகள் நலன்(DAP.3.2) துறை, நாள் 30.05.2017 ஆகியவை பின்பற்றப்படும்.

**4. தகுதிகள்:**

**அ) வயது வரம்பு:** பணிநிறைவு வயது 58 ஆண்டுகள் என்பதால், 01.07.2017 அன்று பணிநாடுநர்களின் வயது 57க்கு மேல் இருக்கக் கூடாது.

**ஆ) கல்வித் தகுதிகள்:**

பணிநாடுநர் அரசாணை எண்.242 உயர்கல்வி (பி1) துறை நாள்.18.12.2012 ன்படி 10+2+3+2 /10+3+3+2/ 11+2+3+2 என்ற முறையில் தகுதிபெற்றிருத்தல் வேண்டும்.

| பதவி | பரிந்துரைக்கப்படும் கல்வி தகுதி |
|---|---|
| உடற்கல்வி ஆசிரியர் | 1. பொதுக் கல்வித் தகுதி – 10 ம் வகுப்பு / 12 ம் வகுப்பு<br>2. தொழில்நுட்பக் கல்வித் தகுதி<br>i. a) முன்பல்கலைக் கழகம் தேர்ச்சி (Pre university) அல்லது மேல்நிலை அல்லது ஆசிரியர் பள்ளி விடுப்புச் சான்றிதழ் ( இடைநிலை (Secondary grade) அல்லது முதுநிலை அடிப்படை (Senior Basic)<br>மற்றும்<br>b) அரசு உடற்கல்வி ஆசிரியர் மேல்நிலைச் சான்று (Higher grade)<br>அல்லது<br>ii. பள்ளி விடுப்புச் சான்றிதழ் (SSLC தேர்ச்சி)<br>மற்றும்<br>அரசு உடற்கல்வி ஆசிரியர் கீழ்நிலைச் சான்று (Lower grade)<br>அல்லது<br>iii. உடற்கல்வியில் இளங்கலைப்பட்டம் (B.P.Ed)<br>அல்லது<br>iv. சென்னை YMCA உடற்கல்வி கல்லூரி வழங்கிய உடற்கல்வி மற்றும் விளையாட்டில் இளங்கலைப்பட்டம் (B.P.E.S) அல்லது அதற்கு இணையானது<br>அல்லது<br>v. அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட உடற்கல்வி மற்றும் விளையாட்டில் (முதுகலைப்பட்டம் (M.P.E.S) (B.P.E.S பெறாமல் M.P.E.S நேரடியாக பெறப்பட்டிருந்தால்)<br>அல்லது<br>vi. YMCA உடற்கல்வி கல்லூாரி மற்றம் அதற்கு இணையான உடற்கல்வி கல்லூரியில் வழங்கப்பட்ட மாற்று திறனாளிகளுக்கான மொபைலிடி சையின்ஸ் –ல் இளங்கலைப்பட்டம் (B.M.S)<br>அல்லது<br>vii. உடற்கல்வியில் முதுகலைப்பட்டம் (MPEd) (இளங்கலை பட்டம் (B.P.Ed) பெறாமல் நேரடியாக முதுகலைப்பட்டம் (MPEd) பெற்றிருந்தாலும் ) |
| ஓவிய ஆசிரியர் | 1. பொதுக் கல்வித் தகுதி – 10 ம் வகுப்பு<br>2. தொழில்நுட்ப கல்வித் தகுதி<br>i. a). தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகம் வழங்கிய பகுதி III ல் வரைகலை மற்றும் வண்ணக்கலையில் இளங்கலைப் பட்டம் அல்லது அதற்கு இணையானது<br>அல்லது<br>b). அண்ணாமலை பல்கலைக்கழகம் வழங்கிய வரைகலை பட்டயப் படிப்பு அல்லது வண்ணக்கலை பட்டயப் படிப்பு<br>அல்லது<br>ii. அரசு கலை மற்றும் கைவினைக் கல்லூரிகளில் வரைகலை அல்லது கமர்ஷியல் ஆர்ட்ஸ் மாடலிங் பட்டயப்படிப்பு அல்லது அரசு தொழில்நுட்பத் தேர்வில் |

| | |
|---|---|
| | ப்ரீ ஹேண்ட் அவுட்லைன் மற்றும் மாடல் டிராயிங் –ல் மேல்நிலை (Higher grade)<br>அல்லது<br>மாமல்லபுரம், தமிழ்நாடு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை நிறுவனத்தால் வழங்கப்பட்ட அரசு ஓவிய பட்டயப்படிப்பு அல்லது சான்றிதழ்.<br>மற்றும்<br>iii. ஆசிரியர் தொழில்நுட்பச் சான்றிதழ்<br>அல்லது<br>தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநரால் (DOTE) வழங்கப்பட்ட fine Arts –ல் (5ஆண்டு காலம் ) பட்டயப்படிப்பு<br>அல்லது<br>Fine arts –ல் சென்னை பல்கலைக்கழகம் அல்லது பாரதிதாசன் பல்கலைக்கழகம் வழங்கிய இளங்கலைப்பட்டம். |
| இசை ஆசிரியர் | 1. பொதுக் கல்வித் தகுதி – 10 ம் வகுப்பு<br>2. தொழில்நுட்பக் கல்வித் தகுதி<br>i. பகுதி III ல் இசையில் இளங்கலைப் பட்டம்<br>அல்லது<br>ii. a). அண்ணாமலை பல்கலைக்கழகம் வழங்கிய சங்கீத பூஷன்<br>அல்லது<br>b). சென்னை அரசு தேர்வுத் துறை இயக்குநர் வழங்கிய இசையில் சங்கீத வித்வான்<br>அல்லது<br>c). சென்னை பல்கலைக்கழகம் வழங்கிய சங்கீத சிரோமணி<br>அல்லது<br>d). சென்னை/மதுரை பல்கலைக்கழகம் வழங்கிய இசையில் பட்டயப் படிப்பு<br>அல்லது<br>e). இசையில் மேல்நிலை (Higher Grade) அரசு தொழில்நுட்பச் சான்றிதழ்<br>அல்லது<br>f). மாறுபட்ட பாட நெறியில், இசையில் 40 % உடன் (கருத்தியல் மற்றும் செய்முறை) தனித்தனியாக<br>மற்றும்<br>iii. ஆசிரியர் தொழில்நுட்பச் சான்றிதழ்<br>அல்லது<br>iv. அரசு தேர்வுத்துறை இயக்குநர் வழங்கிய இசை ஆசிரியர் பட்டயப்படிப்பு<br>அல்லது<br>v. அரசு தேர்வுத்துறை இயக்குநர் வழங்கிய இந்தியன் இசையில் ஆசிரியர் சான்றிதழ். |
| தையல் ஆசிரியர் | 1. பொதுக் கல்வித் தகுதி – 10 ம் வகுப்பு<br>2. தொழில்நுட்பக் கல்வித் தகுதி<br>i. a). ஊசி வேலை மற்றும் ஆடை தயாரிப்பு (மேல்நிலை) மற்றும் பூந்தையல் (Higher grade) (மேல்நிலை) சான்று<br>அல்லது<br>b). சென்னை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி மையம் வழங்கிய காஸ்டீயும் டிசைனிங் மற்றும் ஆடை வடிவமைப்பு பட்டயப்படிப்பு<br>அல்லது<br>c). இன்டஸ்டீரியல் பள்ளிச்சான்று<br>மற்றும்<br>ii. ஆசிரியர் தொழில்நுட்பச் சான்றிதழ் |

*குறிப்பு : ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளே இறுதியானது.*

இவ்வறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பாடங்களுக்குரிய காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பிற்சேர்க்கை–1ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தமிழ்மொழி பாடத்தினை பகுதி–1 அல்லது பகுதி–2ல், பத்தாம் வகுப்பு / பி,யு.சி., / மேல்நிலைக் கல்வி வரையில் பயின்றிருக்க வேண்டும். அவ்வாறு பயின்றிருக்காத தேர்வர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ் மொழி தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியினை, இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளன்று பெற்றிருக்காத தேர்வர்கள், இப்பணித் தெரிவிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். விண்ணப்பிக்கும் முன் தேர்வர்கள் தங்கள் தகுதியினை தாங்களே உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். தேர்வர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்படுதல் என்பது, அவர்களது தகுதி சரிபார்க்கப்பட்டது என்பதாக கருதப்படக்கூடாது. தேர்வரின் தகுதியானது தேர்வு வாரியத்தால் சான்றிதழ் சரிபார்ப்பின் போது மட்டுமே சரிபார்க்கப்படும்.

**குறிப்பு :** பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு இறுதி நாளுக்கு (18.08.2017) முன்னதாகவே அனைத்து தகுதிகளுக்கான சான்றிதழ்களும் கண்டிப்பாக பெறப்பட்டிருக்க வேண்டும்.

**இ) இணையான கல்வித் தகுதி:**

இப்பணித் தெரிவிற்கு வரையறுக்கப்பட்டுள்ள பாடத்தில் கல்வித் தகுதியினை பெற்றிருக்காமல், தான் பெற்றிருக்கும் கல்வித் தகுதியானது, வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கான பாடத்திற்கு இணையானது என தேர்வரால் கோரப்படும் நிலையில், அதற்குரிய, தமிழக அரசால் வெளியிடப்பட்ட இணைக் கல்வித் தகுதிக்கான அரசாணையினை சான்றிதழ் சரிபார்ப்பின்போது தேர்வர்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

**5. தேர்வுக் கட்டணம்:**

அ) தேர்வர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ.500/– (SC/SCA/ST மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தேர்வுக் கட்டணம் ரூ.250/– மட்டும்) இணையவழியே கடன் அட்டை (Credit Card) / பற்று அட்டை (Debit Card) / இணையவழி பண (Net Banking) பரிமாற்றம் மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

ஆ) தேர்வர்கள், இணையவழி பணபரிமாற்றத்திற்கான சேவைக் கட்டணத்தினையும் செலுத்த வேண்டும்.

இ) மேற்கொண்டுள்ள இணையவழி அல்லாத **கேட்பு வரைவோலை / அஞ்சல் ஆணை போன்றவை மூலம் செலுத்தப்படும் தேர்வுக் கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.** அவ்வாறு தேர்வுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பித்தல் நடைமுறை முற்றிலும் இணையவழியானதாகும். இதனை தவிர்த்து ஏனைய எழுத்துபூர்வமான விண்ணப்பங்கள் தேர்வு வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**6. விண்ணப்பிக்கும் முறை:**

1. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் **www.trb.tn.nic.in** இணையதளத்தில் இதற்குரிய trbonlineexams.in/spl/ இணைப்பினை பயன்படுத்தி இணைய வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
2. இணைய வழியே விண்ணப்பிக்கும்போது, தேர்வர்களால் தெரிவிக்கப்படும் விவரங்களுக்கு உரிய ஆதார ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் நிலையில், தேர்வர்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

**7. தேர்வு அமைப்பு முறை:**

எழுத்துத் தேர்வானது 2 மணி மற்றும் 30 நிமிடங்கள் நேரத்திற்கு, 95 கொள்குறி வினாக்களைக் கொண்டு ( ஒரு தாள்) நடத்தப்படும்.

| பாடம் | வினாக்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | காலஅளவு |
|---|---|---|---|
| முக்கியப்பாடம் | ஒருமதிப்பெண்வினாக்கள்:95 | 95 | 2 மணி மற்றும் 30 நிமிடங்கள் |

குறிப்பு:
- i) முக்கியப்பாடத்திற்கான வினாக்கள் தேர்வர்கள் விண்ணப்பித்துள்ள முக்கியப்பாடத்தில் இருந்து கேட்கப்படும்.
- ii) அனைத்துப் பாடங்களுக்குமான வினாக்கள் கொள்குறி வினாமுறையில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் மட்டுமே கேட்கப்படும்.
- iii) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்பொழுது வேறுஇடத்தில் பணிபுரிபவராயின், சான்றிதழ் சரிபார்த்தலின்போது தடையின்மைச் சான்றிதழை பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ) **பாடத்திட்டம்:** தேர்விற்கான பாடத்திட்டம் அரசு இதழ் எண்.2, நாள்.05.01.2015 ல் வெளியிடப்பட்டுள்ளது. பணிநாடுநர்கள் பாடத்திட்டத்தை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் **www.trb.tn.nic.in** –ல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இ) **குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் :** G.O.172 பள்ளிக்கல்வித் (TRB) துறை நாள்.18.07.2017 -ன்படி தேர்வர்கள் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் – எழுத்து தேர்வில் 40% மதிப்பெண்கள் (SC/SCA இனத்தவர் 35% ; ST இனத்தவர் 30% மதிப்பெண்கள்).

**8. தெரிவு நடைமுறை:**

பணித்தெரிவு பின்வரும் இரு நிலைகளில் நடைபெறும்.

அ) எழுத்துத் தேர்வு

ஆ) சான்றிதழ் சரிபார்ப்பின்போது தகுதிக்கான மதிப்பெண் (Weightage Marks) வழங்குதல்

**அ) எழுத்துத் தேர்வு**

**23.09.**2017 அன்று முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை எழுத்துத் தேர்வு நடைபெறும். தேர்வு நடைபெறும் இடம் நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்படும். விண்ணப்பித்த தகுதியான தேர்வர்களுக்கு, நுழைவுச்சீட்டுகள் ஆசிரியர் தேர்வு வாரிய அதிகாரப்பூர்வ இணையதளமான **www.trb.tn.nic.in** –ல் பதிவேற்றம் செய்யப்படும். அஞ்சல் வழியாக தேர்வர்களுக்கு எவ்விதமான கடிதமும் அனுப்பப்படமாட்டாது. எனவே, தேவையான விவரங்களுக்கு தேர்வர்கள் தேர்வு வாரிய இணையதளத்தினை பார்வையிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வர்களை தேர்வெழுத அனுமதிப்பது தொடர்பான தகுதியினைத் தீர்மானிப்பதில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முடிவே இறுதியானது.

**சொல்வதை எழுதுபவர்கள்:**

உடற்திறன் குறைபாடுடைய தகுதியான தேர்வர்கள் தகுதியான பாடத்திற்கு G.O.Ms.No.68 பள்ளிக் கல்வி(பக3(1)), துறை, நாள் 17.04.2017 ன்படி கோரிக்கை அளிக்கும்பட்சத்தில், மருத்துவச்சான்றின் அடிப்படையில் சொல்வதை எழுதுபவர் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**விடைக்குறிப்புகள் :**

தேர்வு முடிவடைந்த பின்னர் தற்காலிக விடைக்குறிப்பு வெளியிடப்படும். தற்காலிக விடைக்குறிப்பின் மீது ஆட்சேபணை எழுப்ப விரும்பும் தேர்வர்கள், தற்காலிக விடைக்குறிப்பு வெளியிடப்பட்ட **ஐந்து** தினங்களுக்குள், தற்காலிக விடைக்குறிப்பின்மீது தங்களது ஆட்சேபணையை தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட காலத்திற்குப்பின் பெறப்படும் எத்தகைய ஆட்சேபணைகள் மற்றும் ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. மற்றும் தேர்வர்கள் பிற்காலத்தில் எவ்வித கோரிக்கையும் எழுப்பக் கூடாது.

ஆட்சேபணைகள் கருத்திற்கொள்ளப்பட்டு, இறுதியாக விடைக்குறிப்பு வெளியிடப்படும். இந்த விடைக்குறிப்பே இறுதியானதாகும். தேர்வரின் ஆட்சேபணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ தனியாக ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்பட மாட்டாது.

ஆட்சேபணைகளை பரிசீலிப்பதற்கு அமைக்கப்படும் வல்லுநர்குழுவை பற்றி தேர்வரால், எத்தகைய ஐயப்பாடுகளையும் எழுப்ப இயலாது.

**எழுத்துத் தேர்வு முடிவுகள் வெளியீடு:**

தேர்வர்களின் மதிப்பெண்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அதிகாரப்பூர்வ **www.trb.tn.nic.in** –ல் இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு முடிவுகள் வெளியிடுவது குறித்து பத்திரிகைகள் / ஊடகங்களின் வழியே தகவல் அறிவிக்கப்படும்.

**ஆ) சான்றிதழ் சரிபார்ப்பு:**

தேர்வர்கள் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில், நடைமுறையில் உள்ள இனசுழற்சி முறை, காலிப்பணியிடம் மற்றும் தொடர்புடைய இதர விதிகளின் அடிப்படையில் 1:2 என்ற விகிதாச்சாரத்தில் தேர்வர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு :** ஒரு குறிப்பிட்ட இனசுழற்சி இடத்திற்கு, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்ணை ஒன்றிற்கும் மேற்பட்ட தேர்வர்கள் பெற்றிருந்தால், அக்குறிப்பிட்ட இனசுழற்சி இடத்திற்கு அத்தகைய அனைத்து தேர்வர்களும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள்.

சான்றிதழ் சரிபார்ப்புப் பட்டியல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கான அழைப்புக் கடிதம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான **www.trb.tn.nic.in** –ல் மட்டும் வெளியிடப்படும்.

9. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின், பின்வரும் சான்றிதழ்கள் Cut off தேதி(18.08.2017) (அதாவது விண்ணப்பம் இணையதளத்தில் பூர்த்தி செய்ய நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதி) க்கு முன் பெற்ற சான்றிதழ்கள் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

அ) பின்வரும் கல்வித்தகுதிகளுக்குரிய அசல் சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்கள்

i. பத்தாம் வகுப்பு / SSLC

ii. மேல்நிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான படிப்பு

iii. தொடர்புடைய தொழில் நுட்ப கல்வி சான்றிதழ்கள் (பத்தி எண்.4 ல் கொடுக்கப்பட்டுள்ள படி)

iv. வேலைவாய்ப்பு பதிவு அட்டை (முழு கல்வித் தகுதியும் பதிவு செய்யப்பட்டு நாளது வரை புதுப்பிக்கப்பட்டது).

**ஆ) இனச்சான்றிதழ்**

இன அடிப்படையில் இட ஒதுக்கீடு கோரும் தேர்வர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தமிழக அரசின் அலுவலர்களிடமிருந்து இனச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

i) ST – வருவாய் கோட்ட அலுவலர் (11.11.1989க்குப் பின்னர் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின்)

ii) SC/SCA – தேர்வரின் சொந்த வட்டத்தின் வட்டாட்சியர்

iii) BC/MBC/DNC – தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது சிறப்பு துணை வட்டாட்சியர்.

**குறிப்பு:**

i) திருமணமான பெண் தேர்வர்கள், தங்களது தந்தையாரின் பெயரில் இனச்சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். (கணவரின் பெயரில் இனச்சான்றிதழ் பெற்றிருக்க கூடாது)

ii) பிற மாநிலம் / யூனியன் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட இனச்சான்றிதழ்கள், 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு கருத்திற்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய தேர்வர்கள் பொதுப்பிரிவுக்கு மட்டும் கருதப்படுவார்கள்.

**இ) தமிழ் வழியில் பயின்றோருக்கான சான்று:**

தமிழ் வழியில் பயின்றோருக்கான இட ஒதுக்கீடு கோருபவர், தமிழ்வழியில் பயின்றார் என்பதற்கான சான்றினை பிற்சேர்க்கை–2ல் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஈ) மாற்றுத் திறனாளிகளுக்கான சான்று (தகுதியிருப்பின்):**

அரசாணை எண்.68 பள்ளிக்கல்வித் SE3(1) துறை, நாள்.17.04.2014 –ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டு சலுகையினைப் பெற விரும்பும் தேர்வர் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள உரிய ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழ் மற்றும் உதவிகள் பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பிடப்பட்டுள்ள நாளில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு, நேரில் வருகைதராத தேர்வர்களைப் பொருத்த வரையில் அவர்கள் பணித்தெரிவிற்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை பெற்றிருந்தாலும், தெரிவுப்பணிக்கு கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

**தகுதிக்கான மதிப்பெண்கள் வழங்குதல்:**

சான்றிதழ் சரிபார்ப்பிற்குப்பின், சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொண்ட தகுதியான தேர்வர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு அவர்களுடைய தகுதிக்கான மதிப்பெண்கள் வழங்கப்படும்.

| **வ. எண்** | **விவரம்** | **வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்தக் காலம்** | **மதிப்பெண்கள்** |
|---|---|---|---|
| 1 | முழு கல்வித் தகுதியை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து நாளதுவரை புதுப்பிக்கப்பட்டிருந்தால் | 1 வருடம் வரை | 0 |
| | | 1 முதல் 3 வருடம் வரை | 1 |
| | | 3 முதல் 5 வருடம் வரை | 2 |
| | | 5 முதல் 10 வருடம் வரை | 3 |
| | | 10 வருடத்திற்கு மேல் | 5 |

**10. இறுதித் தெரிவு:**

சான்றிதழ் சரிபார்ப்பிற்குப்பின், ஒவ்வொரு தேர்வருக்கும் அவர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணுடன், தகுதிக்கான மதிப்பெண்களையும் (Weightage Marks) சேர்த்து மொத்த மதிப்பெண்கள் கணக்கிடப்படும். இதனடிப்படையில் தகுதிப்பட்டியல் தயார் செய்யப்படும். இத்தகுதிப்பட்டியலைக்கொண்டு, தகுதியுடன் இனச்சுழற்சி (Merit-cum-communal) முறையினை பின்பற்றி அதன் அடிப்படையில் இறுதி பணித்தெரிவு மேற்கொள்ளப்படும்.

ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான **www.trb.tn.nic.in** –ல் இறுதித் தெரிவு முடிவுகள் வெளியிடப்படும். இறுதியாக தேர்வரின் தகுதியினை தீர்மானிப்பது,

ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் பணிநியமன அலுவலரின் முடிவிற்குட்பட்டது. தேர்வர் எந்த பணிக்காக எந்த துறைக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளாரோ அத்துறையினால் தேர்வரின் தகுதி சரிபார்க்கப்பட்ட பின்னர் பணி நியமன ஆணை, தொடர்புடைய துறையின் நியமன அலுவலரால் வழங்கப்படும்.

**11. பொதுவான அறிவுரைகள்:**

அ) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்கள் உத்தேசமானவை. பணித்தெரிவினை இறுதி செய்யுமுன் பயன்பாட்டுத் துறையால் கோரப்படும் காலிப்பணியிடங்களுக்கேற்ப, இக்காலிப் பணியிடங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

ஆ) சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின், இணைய வழி விண்ணப்பிக்கும்போது தேர்வரால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு உரிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்த வேண்டும். அதற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய கோரிக்கைகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ) இட ஒதுக்கீடு, அடிப்படைக் கல்வித்தகுதிகள், இனம் மற்றும் தகுதியினை நிர்ணயம் செய்யும் இதர விவரங்களை தவறாக / முழுமையற்ற வகையில் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ) அலைபேசி, எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள், நினைவகம் பொதிந்த கை வளையங்கள், அனைத்து வகையான மின்னணு சாதனங்கள், கிளார்க் அட்டவணை மற்றும் கணிப்பான் போன்றவை தேர்வறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது.

உ) தேர்வர்கள் கொண்டுவரும் எந்தவொரு பொருளையும் பாதுகாத்து வைப்பதற்கென எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படாத நிலையினை கருத்தில் கொண்டு, அலைபேசி உள்ளிட்ட எந்தவொரு தடைசெய்யப்பட்ட பொருட்களையும் தேர்வு மையத்திற்கு எடுத்து வர வேண்டாம் என தேர்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஊ) எந்தவொரு தேர்வரும், தேர்வு மையத்திலோ, வாரியத்தால் தேர்வு நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட அலுவலரிடமோ விரும்பத்தகாத வகையில், நடந்துகொள்ளக் கூடாது. அத்தகைய எந்தவொரு செயலும் கடுமையான தவறாகக் கருதப்படுவதுடன், உரிய தண்டனை வழங்கப்படும்.

எ) தேர்வர்கள் தங்களது சொந்த செலவில் தேர்வெழுதவும், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படின் வருகை தரவும் வேண்டும். பயணப்படி / அகவிலைப்படி ஏதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

ஏ) தெரிவு நடைமுறையினைப் பொறுத்தவரையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முடிவே இறுதியானது. தெரிவு செய்யப்படாமை குறித்து பெறப்படும் எத்தகைய கோரிக்கையும், எக்காரணத்திற்காகவும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

ஐ) எந்தவொரு முறையிலும் சிபாரிசுகளை நாடும் நிலையில், அத்தகைய செயல் தகுதியிழப்பிற்கு வழிவகை செய்யும்.

ஒ) 18.08.2017 அன்று பிற்பகல் 11.59 மணி வரையில் மட்டுமே இணையவழியே விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க இயலும். அதற்குப்பின் இணைப்பு துண்டிக்கப்படும்.

*குறிப்பு : ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களே இறுதியானது.*

**தலைவர்**

# பிற்சேர்க்கை – I

## பாடவாரியான காலிப்பணியிட விபரம்

**துறை : பள்ளிக்கல்வி மற்றும் பிற துறைகள்**

| வ.எண். | பாடம் | பின்னடைவு பணியிடம் | நடப்பு பணியிடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | உடற்கல்வி | – | 663 | 663 |
| 2 | ஓவியம் | 7 | 320 | 327 |
| 3 | இசை | 4 | 82 | 86 |
| 4 | தையல் | 5 | 244 | 249 |
| | மொத்தம் | 16 | 1309 | 1325 |

## பிற்சேர்க்கை –II

**தமிழ்வழி** : தமிழ்வழியில் பயின்றவர்கள் அவர்கள் பயின்ற பல்கலைக்கழகம் / கல்வி நிலையங்களிலிருந்து பெறப்பட்ட மாற்றுச்சான்றிதழ் / தற்காலிக சான்றிதழ் / பட்டச் சான்றிதழ் / மதிப்பெண் சான்றிதழ் இவற்றில் ஏதேனும் ஒன்றில் தமிழ் வழியில் தேவையான கல்வித்தகுதியை படித்ததற்கான ஆவணம் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவர் பயின்ற கல்வி நிறுவனத் தலைவரிடமிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் மூலம் தமிழ்வழி பயின்றதற்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

<u>தமிழ்வழி பயின்றமைக்கான சான்றிதழ் (மாதிரி படிவம்)</u>
<u>( கல்வி நிறுவனத் தலைவர்/பதிவாளர்/முதல்வர் மட்டுமே வழங்க வேண்டும்)</u>

திரு/திருமதி/செல்வி ________________________________ என்பார் ______________________ பாடப்பிரிவில் வருடம் ________ முதல் _______ வரை தமிழ்வழியில் பயின்றார் என்று சான்றளிக்கப்படுகிறது. இந்த சான்றிதழ் பாடப்பொருள்/மதிப்பெண் பட்டியல்/மாற்றுச்சான்றிதழ் ஆகியவற்றை சரிபார்த்த பின்னரே வழங்கப்படுகிறது.

பதிவாளர் / முதல்வர் / கல்வி நிறுவனத் தலைவர்

இடம் :

நாள்: